வெட்டுவதற்கு, டிராக்டர்கள் வாங்குவதற்கு, பம்ப் செட் இணைப்பதற்கு இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் மூலமாகவே அந்த விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். அதைப் பரிசிலனை செய்து, நில அடமான வங்கியின் மூலமாகக் கடன் வழங்குகிறார்கள், நான் குறிப்பிட்ட இனங்களுக்கு. அதுபோலவே, அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும் ஒரு கோடி ரூபாய் பம்ப் செட் அமைப்பதற்கும், 70 இலட்ச ரூபாய் டிராக்டர்கள் வாங்குவதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே மட்டும் 450 டிராக்டர்களுக்கு—இதுவரையில் வழங்காத அளவுக்கு—கூடுதலான அளவுக்கு—அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்விகளுக்கு விடை அளிக்கும் நேரத்தில், அமைச்சர்கள் நீண்ட விடை அளிக்க வேண்டியிருக்கிறது. ஒரு மணி நேரத்தில் கேள்விகளை முடிக்க வேண்டியிருக்கிறது. அதற்கான விதிமுறை இருக்கிறது :

The Speaker may direct that lengthy answers or statistics given in answer to a starred question shall be laid on the table and printed in the official report of the proceedings of the Assembly instead of being given orally.

என்பது விதி. மாண்புமிகு அமைச்சர்கள் நீண்டதொரு விடை அளிக்க வேண்டியிருந்தால், "தனியாகக் கேள்வி கேளுங்கள்" என்று சொல்லுகின்ற முறையையோ அல்லது அச்சடித்து உறுப்பினர்களுக்கு வழங்குகின்ற முறையையோ மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கேள்வி எண்கள் 41, 42, 43, 44 ஆகியவற்றை பிறகு எடுத்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது கேள்வி எண் 45 எடுத்துக் கொள்ளப்படுகிறது.

Bureau of Tamil Publications

*45 Q.—THIRU A. M. RAJA: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) the number of books published by the Bureau of Tamil Publications so far;

(b) the value of such books;

(e) the amount realised by way of sale of books as on 30th September 1967; and

(d) the value of books remaining unsold?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:

(அ) 1—4—1968 வரையில் 150 நூல்கள்.

(இ) ரூ. 19,49,045.00.

(உ) விற்பனையாளருக்குத் தந்த தாகு நீங்கலாக நிகர வசூல் ரூ. 5,29,123.00.

(எ) ரூ. 11,35,010.00.

1968 ஆகஸ்ட் 20]

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, இப்பொழுது வெளியிட்ட நூல்கள் என்ன என்ன என்று சொல்லமுடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 150 நூல்கள், கிட்டத்தட்ட பதினெட்டுக்கு மேற்பட்ட வகைகளில் வெளியிடப் பட்டிருக்கின்றன. பொருளியல், வரலாறு, புவியியல், அரசியல், உளவியல், தத்துவம், வணிக இயல், சமூக இயல், புள்ளி இயல், கல்வி, அறிவியல், கணிதம், பௌதிகம், விலங்கியல்; தாவர இயல்; மருத்துவம், பொறியியல், சட்டம் ஆகிய துறைகள் பற்றிய நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ரூ. 11 இலட்சத்திற்கு மேற்பட்ட அளவுக்கு நூல்கள் தேங்கிக் கிடப்பதன் காரணம் என்ன? அந்த நூல்கள் தேங்காமல் இருப்பதற்கு அரசினர் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, புகுமுக வகுப்பு, கடைநிலை வகுப்பு ஆகியவைகளுக்குப் பயன் படும் வகையில் இந்த நூல்கள் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டன. இப்பொழுதுதான் தமிழைப் பாட மொழியாகப் புகுத்துகின்ற நிலைமையும், தீவிரப்படுத்துகின்ற நிலைமையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தால், இந்த நூல்களெல்லாம் நாளடைவில் விலை போகும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

திரு. டி. மார்டின்: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இன்றைய முதலமைச்சர் அவர்கள் முன்பு எழுதிய புத்தகங்களாவன, 'கம்பரசம்', 'குமரிக்கோட்டம்', 'ஆரிய மாயை' போன்ற புத்தகங்களை இந்தத் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் மூலம் வெளியிடப் போவதாகப் பரவலாகப் பேசப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இனி நடைபெறப் போவதைப்பற்றி கேள்வி கேட்கக்கூடாது. எனவே, இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

THIRU K. VINAYAKAM: Are these books published by this Bureau of Tamil Publications just translations from the original books or compilation of the subject by the authors?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சில புத்தகங்கள் மொழி பெயர்ப்புகளாக இருக்கின்றன. பெரும் பாலான புத்தகங்கள், அந்தந்தத் துறைக்குரிய ஆசிரியர்களாலேயே எழுதப்பட்ட புத்தகங்களாகத்தான் இருக்கின்றன.

விருதுநகர் செந்திக்குமார் நாடார் ஆண்கள் கல்லூரி.

* 46 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் செந்திக்குமார் நாடார் ஆண்கள் கல்லூரி அதன் நிர்வாகத்தினரால் அக்டோபர் மாதம் மூடப்பட்டதா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?